21-9-2025 Nagercoil www.dinakaran.com

தினகரன்

DINAKARAN No.1 நாளிதழ்

## நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில்

# இளம் செஞ்சிலுவை சங்க துவக்க விழா

நாகர்கோவில், செப். 21: மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில், இளம் செஞ்சிலுவை சங்க துவக்க விழா கடந்த 18ம் தேதி நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் பிஜி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக மருத்துவர் ஜோலின் லிஜா கலந்து கொண்டு, ரத்ததானம் குறித்து உரையாற்றினார். விழாவில் ரத்த தானம் வழங்கிய மாணவர்களை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது.

பேராசிரியை அல்சி ராணி வரவேற்று பேசினார். முடிவில் செஞ்சிலுவை சங்க கன்வீனர் முனைவர் அலக்ஸ் ஜேக்கப் நன்றி கூறினார்.

விழா ஏற்பாடுகளை பேராசிரியர்கள் லெனின் சேவியர், பி.ஆர்.ஆஷா, லிற்றி டேவிஸ், பி.எஸ்.ஆஷா, ஜாண் சாமுவேல், ஐவின்ஜோயல் மற்றும் உறுப்பினர்கள் ஷிபு, ஜாண் கிறிஸ்டோபர் ஆகியோர் செய்திருந்தனர்.




மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில், இளம் செஞ்சிலுவை சங்க துவக்க விழா நடந்தது.